[2022 ஏப்ரல் 19

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற ஆட்சியில், முன்னாள் இருந்த ஆட்சியில் ஒரு குழு அமைக்கப்பட்டு, மனித வளம் எங்கே குறைவாக இருக்கிறது, எங்கே உயர்த்தலாம் என்பன குறித்து அறிக்கை வந்தது. காலத்திற்கேற்ப, புது தகவல் தொழில்நுட்பங்கள் வந்த பிறகு, பொதுவாக Government–லும், குறிப்பாக நிதித் துறையில் Integrated Financial and Human Resource Management System (IFHRMS) வந்த பிறகு, எத்தனைப் பணியிடங்கள் உண்மையிலேயே தேவை என்பதை அறிய முடிகிறது. இப்போது சம்பளமும், ஓய்வூதியமும் automatic ஆக வங்கியில் transfer ஆகி SMS மூலம் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தகவல் அனுப்பப்படுகிறது. Salary slips, TDS போன்றவற்றை நாம் online–ல் எடுத்துக்கொள்ள முடியும். காலத்திற்கேற்ப உண்மையிலேயே எத்தனைப் பணியிடங்கள் தேவை, அரசியலுக்கு அப்பாற்பட்டு, Government–க்கு அப்பாற்பட்டு, அவர்கள் ஆட்சியிலேயே எங்கெங்கெல்லாம், எப்படிச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்பன குறித்து சிறப்பான அறிக்கை வெளிவந்தது. ஏற்கெனவே சொன்னதுபோல, காலத்திற்கேற்ப, தேவைகளுக்கேற்ப, குறையில்லாமல் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும், அலுவலகங்களும் உருவாக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

130—

பால் குளிரூட்டும் நிலையம்

***15201—திரு. K.A. பாண்டியன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் உறங்கிக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். எங்களின் வணக்கத்துக்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

இன்றைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள், விழுப்புரம் மாவட்டம், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து நிருவாக வசதிக்காக கடலூர் மாவட்டத்தை தனியாகப் பிரித்துத் தந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிதம்பரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து சுமார் 3,000 லிட்டர் பால் தினமும் கொள்முதல் செய்யப்படுகிறது. அதைப்போல் சிதம்பரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆவின் மூலமும் சுமார் 5,000 லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகின்றது. சிதம்பரம் பகுதியைச் சுற்றி சுமார் 25–க்கும் மேற்பட்ட ஆவின் சில்லறை பால் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. சிதம்பரத்திலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சேத்தியாத்தோப்பு பால் குளிரூட்டும் நிலையத்திற்குத்தான் பால் கொண்டு செல்லப்படுகின்றது. சிதம்பரம் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான சுமார் 6 ஏக்கர் நிலம் சிதம்பரத்தில் உள்ள விஷ்ணுபுரத்தில் இருக்கிறது. அந்த இடத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தால், பால் கூட்டுறவுச் சங்கம் அமைத்திடவும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கூடுதலாக பால்

கொள்முதல் செய்யவும் இயலும். எனவே, சிதம்பரம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த விழுப்புரம், கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து பிரித்து புதிதாக கடலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செயல்பட்டு வருகிறது. தற்போது ஒன்றியத்தில் சராசரியாக 25000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது என்று சொல்வது, உண்மைக்கு மாறானது. 43,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்நிலையில் சிதம்பரம் சுற்றுப்புறத்தில் உள்ள பகுதியில் இரண்டு தொடக்கக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மூலமாக நாளொன்றுக்கு சுமார் 500 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, சிதம்பரத்திற்கு சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ள சேத்தியாத்தோப்பு பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், கடலூர் மாவட்ட பால் குளிரூட்டும் நிலையம், சேத்தியாத்தோப்பில் அமைந்துள்ளது. பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க குறைந்தது 2 ஏக்கர் நிலப்பரப்பு தேவைப்படுவதோடு, 10 கோடி ரூபாய் செலவும் ஆகும். மேலும், அப்பகுதியில் பால் உற்பத்தி 30,000 லிட்டருக்குக் குறையாமல் இருக்க வேண்டும். தற்போது மொத்த பால் குளிர்விப்பான்கள் சிறிய அளவில் பால் குளிரூட்டும் மையங்களாக அதன் இடத்திலேயே உற்பத்தியைப் பொறுத்து 500 லிட்டர் முதல் 5,000 லிட்டர் வரை நிறுவப்பட்டு வருகின்றன. எனவே, சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற விவரத்தினைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரில் செயல்பட்டுவரும் பால் நுகர்வோர்

2022 ஏப்ரல் 19]

கூட்டுறவு உற்பத்தி சங்கம் லிட். எண் 1958, அலுவலகக் கட்டடம் தற்போது வாடகைக் கட்டடத்தில் உள்ளது. சிதம்பரம் மையப் பகுதியில் சுமார் 10,000 சதுர அடியில் சங்கத்திற்குச் சொந்தமான நிலம் உள்ளது. சிதம்பரம் நகரில் நடராஜர் ஆலயமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் உள்ளதால் சிதம்பரம் நகருக்கு நாள்தோறும் சுமார் 50,000–க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றார்கள். எனவே, அதிகப்படியான பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பால் விற்பனையைக் கூட்டவும், மேற்படி இடத்தில் அலுவலகக் கட்டடம் ஒன்றினை அமைக்கவும், நவீன பாலகம் ஒன்றினை அமைத்துத் தரவும் அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியினை ஒதுக்கித் தருவார்கள் என்றால், நிச்சயமாக வெகுவிரைவில் அதனைச் செய்து தருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

131—

இ-சேவை மையம்

***927—திரு. க. செல்வராஜ்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தெற்குத் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், பெருமாநல்லூரில் இ–சேவை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*